10.09.2025



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.49/2023**

**வா.சா. 2–காளிதாஸ், த/பெ.செல்லமுத்து**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது மனைவிக்கு படிப்பறிவு இல்லை என்பதால் இவ்வழக்கு பற்றிய விவரங்களை வழக்கறிஞருக்கு நான் தான் தெரிவித்தேன் என்று சொன்னால் சரிதான். என் மனைவியின் தாயார் அசல் வழக்கு எண்.14/1999 என்ற வழக்கை சித்ரா என்பவருக்கு எதிராக தாக்கல் செய்தார். அந்த சித்ரா பிரதிவாதி செல்வராணியின் மாமியார். சித்ரா இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. இந்த சித்ரா உயிரோடு தான் உள்ளார் என்றால் சரிதான். என் மனைவியின் தாயார் என் மனைவிக்கு 2009 ம் ஆண்டு தான் ஒரு உயில் ஆவணத்தை எழுதிவைத்தார். தாவா சொத்து 2009 ம் ஆண்டு என் மனைவியின் தாயாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் நீதிமன்ற உத்தரவின் பேரில் பாகபிரிவின் படி கிடைக்கப்பெற்றது.

நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 6ல் 28.04.2016 அன்று என் மனைவியின் தாயார் அங்கம்மாளுக்கு நிறைவேற்று மனு எண்.20/2014 மூலம் சுவாதீனம் கிடைக்கப்பெற்றது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து 2016ம் ஆண்டு தான் என் மனைவியின் தாயாருக்கு சட்டப்படி பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து 2016ம் ஆண்டு என் மனைவியின் தாயாருக்கு பாத்தியப்பட்டது, அதனால் 2009ம் ஆண்டு தாவா சொத்தை பொறுத்து என் மனைவிக்கு அவரது தாயார் உயில் ஆவணம் எழுதிக்கொடுத்தது சட்டப்படி செல்லத்தக்கல்ல என்று சொன்னால் சரியல்ல. என் மாமியாருக்கு எழுத படிக்க தெரியாது. எழுத படிக்க தெரியாத என் மாமியாரை அழைத்து சென்று மோசடியாக வா.சா.ஆ.6 ஆவணத்தை என் மனைவியின் பெயரில் ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 ஆவணத்தில் மொத்தமாக தான் குறிப்பிட்டுள்ளார்கள், விவரமாக குறிப்பிடவில்லை, நீதிமன்ற தீர்ப்பாவதற்கு முன்பாகவே என் மாமியார் தாவா சொத்தை பொறுத்து எழுதப்பட்ட வா.சா.ஆ.6 ஆவணம் சட்டப்படி செல்லக்கத்தக்கல்ல என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.6 உயில் ஆவணம் எழுதும் போது சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நான் உடன் சென்றேன். வா.சா.ஆ.6 ஆவணம் முத்திரைத்தாளில் எழுதப்பட்டதா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணம் எத்தனை தாள்கள் கொண்டது என்றால் நான் எண்ணி பார்க்கவில்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் நானும், மற்றொரு சாட்சி கையொப்பம் இட்டவர் இறந்துவிட்டார். அவருடைய பெயர் தெரியாது, ஆளை தெரியும், அவர் இறந்துவிட்டார். அந்த மற்றொரு சாட்சி துறையூரை சேர்ந்தவர். வா.சா.ஆ.6 ஆவணத்தில் சாட்சி என்ற இடத்தில் உங்களுடைய கையொப்பம் உள்ளதா என்றால் சாட்சி வா.சா.ஆ.6 ஆவணத்தை பார்த்துவிட்டு இல்லை என்று கூறுகிறார். நான் வா.சா.ஆ.6 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்பதால் தான் யார் சாட்சி கையொப்பம் இட்டார் என தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து மருமகள் சித்ரா மீது அவரது மாமியார் உணவு அளிக்கவில்லை என்பதால் தான் வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள சொத்தை பொறுத்து ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான்.

அவ்வாறு ஜீவனாம்சத்திற்காக வழங்கப்பட்ட சொத்து ஆயுட்காலம் வரை தான் உரிமையுள்ளது, வா.சா.ஆ.6 ஆவணத்தை எழுதிவைக்க என் மாமியாருக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் செல்லத்தக்கத்லல இல்லை என்பதால், வா.சா.ஆ.6 ஆவணப்படி தாவா சொத்து என் மனைவியின் அனுபவம் சட்டத்திற்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல. என் மனைவி வழக்கு சொத்து சம்மந்தமாக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் விவரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கின் அங்கம்மாளின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளீர்களா என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.3 வாரிசு சான்றிதழ் ஆவணத்தில் பிரதிவாதி தகப்பனார் பெரியசாமி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரியசாமி இறந்துவிட்டதால் அவருடைய மனைவி சித்ரா மற்றும் பிரதிவாதி, இறந்துபோன அங்கம்மாளுக்கு வாரிசுகள் என்று சொன்னால் சரியல்ல. என் மாமியார் அங்கம்மாள் இறப்பதற்கு முன்பே பெரியசாமி இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். பெரியசாமியின் வாரிசுகளும், அங்கம்மாளின் வாரிசுகள் என்று சொன்னால் சரியல்ல. பெரியசாமியின் மனைவி மற்றும் மகள்களை வாரிசாக காட்டாமல் வா.சா.ஆ.3 வாரிசு சான்றிதழை மோசடியாக பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

10.09.2025



வழக்கு தாக்கல் செய்ய என் மனைவிக்கு உரிமையில்லை, வழக்கு நிலைக்கத்தக்கல்ல என்றாலும் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.